எம்.சி.ஓபி.எண் : 4735,**4399**,4400,4396,4397/2022

தேதி: 25.02.2026

மசா : 1

பெயர் : ஜெயா

க/பெயர் : அரிவழகன்

வயது : 53

**<u>மனுதாரரின் தரப்பில் சாட்சி 2ன் முதல் விசாரணை</u>**

நான் MCOP.4399/2022 இல் மனுவில் மனுதாரர். எனது தரப்பில் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நன்கு தெரிந்து கையொப்பம். எனது தரப்பு சான்றாவணங்கள் மசா ஆ5 முதல் மசா ஆ8 வரை குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மனுவில் கூறியுள்ளபடியும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள படியும் விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. விபத்து குறித்து வரைபடம் மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வருமானம் மற்றும் வருமான இழப்பிற்கு ஆவணங்கள் போடவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றாலும் அவை அனைத்தும் சரியாகிவிட்டது என்றாலும் சரியல்ல. எனக்கு தலையில் காயம் ஏற்பட்டு அடிக்கடி தற்பொழுதும் தலைசுற்றல் ஏற்பட்டு வேலைக்கு எங்கும் செல்ல இயலாத நிலை தலையில் வலி ஏற்பட்டுக்கொண்டுதான் உள்ளது. நான் பயணம் செய்த பேருந்து ஓட்டுநர் மீது தான் தவறு என்றாலும் எதிர்மனுதாரர் பேருந்தின் ஓட்டுநர் மீது தவறு அல்ல என்றால் சரியல்ல. நான் பல தலைப்புகளில் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகையானது அதிகம் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.